பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 201

திங்கட்கிழமை
16 ஜூன் 2025

ஆனி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## 88 பேரின் சொத்துகள் முடக்கம்

கொழும்பு, ஜூன் 16
திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் நிதிமோசடிகளில் ஈடுபட்ட 88 பேரின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.
11

# வலி.வடக்கை இராணுவம் ஆக்கிரமித்து 35 ஆண்டுகள்

- 2,700 ஏக்கர் காணிகள் தற்போதும் இராணுவத்திடம்
- 50 வீதக் காணிகளில் விவசாயம், பண்ணைகள்
- 10 வீதக் காணிகளில் வியாபாரச் செயற்பாடுகள்
- பாதுகாப்புப் போர்வையில் வளங்கள் சுரண்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வலிகாமம் வடக்கில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு இன்றுடன் 35 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இன்னமும் அந்த மக்கள் முழுமையாக மீள் குடியமர்த்தப்படாதுள்ளனர். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் அவர் களின் காணிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இன்னமும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு, அவற்றின் பயன்களை இராணுவமே அனுபவித்துவருகின்றது.
11

## வவு. உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதில் இணக்கம்

### தமிழ்க்கட்சிகள் இணைந்து வியூகம்

வவுனியா, ஜூன் 16
வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்க்கட்சிகள் இடையே பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கட்சிகளின் பிரமுகர்களின்
11

## வவு. மாநகரசபையில் ஆட்சியமைப்பது யார்?

### தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சாதகம்

வவுனியா, ஜூன் 16
வவுனியா மாநகரசபைக்கான முதல்வர், பிரதி முதல்வர் தெரிவுகள் இன்று நடைபெறவுள்ளன. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் முதல்வராகவும், ஜனநாயகத் தேசிய கூட்டணியின்
11

## கொழும்பு ம[illegible]கரசபையில் இன்று பெ[illegible] பலப்பரீட்சை

கொழும்பு, ஜூன் 16
இலங்கையில் உள்ள மிக முக்கியமான உள்ளூராட்சி சபையான கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு பிரதான இரு கட்சிகளும் பலப் பரீட்சை
11

## வவுனியா நகரசபையில் ஆட்சி; தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை

வவுனியா, ஜூன் 16
வவுனியா மாநகரசபை ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.
இன்று வவுனியா மாநகர சபைக்கான முதல்வர், பிரதி முதல்வர் தெரிவுகள்
11



தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல்

## யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் சாதனை!

### தங்கம், வெள்ளி வென்றனர்

கொழும்பு, ஜூன் 16
தேசிய மட்ட தடகளப் போட்டியில், 18 வயதுப் பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் இருவர் தங்கப் பதக்கத்தையும், வெள்ளிப் பதக்கத்தையும்
11



முச்சந்தி முரளி

'அவையள் பிடிச்ச இடத்தில குசாலா இருக்கினம் சனமெல்லோ நடுத்தெருவில அந்தரப்படுகினம்'

### பலாலி கிழக்கில் உள்ள

## இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொதுமக்கள் வழிபட அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 16
இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பலாலி கிழக்கு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள 35 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
நேற்றுமுதல் மக்கள் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இன்றி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு
11

## பணிப்பகிஷ்கரிப்புக்குத் தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

விரிவு பக்கம்:- 05

## மிகைப்படுத்தப்படும் வெளிநாட்டு ஒதுக்கீடு

### வெரிட்டே ரிசேர்ச் தகவல்

கொழும்பு, ஜூன் 16
இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு, சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலரால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்று "வெரிட்டே ரிசேர்ச்" ஆய்வு நிறுவனம் தெரிவித்
10

## 220 கிலோ கஞ்சா வடமராட்சியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமராட்சி, பொலிகண்டியில் நேற்று அதிகாலை 220 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கடல் மார்க்கமாகக் கடத்திவரப்பட்ட கஞ்சாவை படகில் இருந்து இறக்கிக்கொண்டிருந்தபோது இராணுவப் புலனாய்வாளர்கள் சுற்றிவளைத்துக் கைப்பற்றியுள்ளனர்.
11





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4103 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 22 29 41 50 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹறண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1170 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 26 29 41 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0129 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 7 0 3 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2209 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 33 65 74 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5861 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 0 5 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1891 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 28 34 63 82 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0436 |
| ආங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 0 5 7 3 |

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு தீர்வு எட்டப்படவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 16**

**இலவச சுகாதாரம் என்பது மக்களினது மனித உரிமையாகும். எனினும் எமது நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் 180க்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு இவ்வாறு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு உடனடித்தீர்வு வழங்க வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது. புற்றுநோய் நோயாளிகள், இதய நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மருந்துகளுக்கும், வலி நிவாரணிகள் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு ஒரு தீர்வை வழங்காமல், மக்களின் இந்த அடிப்படை உரிமையையும் அரசாங்கம் மீறி வருகின்றது. அரசாங்கம் எந்தத் தீர்வையும் வழங்காத ஒரு கொள்கையையே பின்பற்றிவருகிறது. இந்த மருந்துப் பிரச்சினைக்கு அவசரத் தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். மக்களின் உயிர் வாழ்வை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0569 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 9 4 7 0 4 6 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2835 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 05 52 54 63 |


| சனிதா | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 10 30 64 66 |
| வெற்றி வாரம் | 4996 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0705 |
| வெற்றி இலக்கம் | 09 36 49 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| தனுசு | ♐ |
| வெற்றி இலக்கம் | 03 11 15 19 |
| சீட்டிழுப்பு வாரம் | 4547 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கம் | 21 37 48 55 |
| வெற்றி வாரம் | 2011 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 15.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 02 40 44 45 |
| வெற்றி வாரம் | 2661 |



# சேந்தான்குளத்தில் காணியில் தீப்பரவல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இளவாலை, சேந்தான்குளத்தில் உள்ள காணியொன்றில் நேற்று இரவு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

திண்மக் கழிவுகளைக் காணியில் எரியூட்ட முயன்றபோது அருகில் இருந்த பனையில் தீப்பிடித்து இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு மூலம் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-125)

# பொலிஸார் அசண்டையீனம் சீறிப்பாய்ந்த பவானந்தராஜா

யாழ்ப்பாணம், ஜூன் 16

சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது கூட்டத்தில் மானிப்பாய், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பங்கேற்கவில்லை. அதனால் ஆத்திரமுற்ற ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் 10 நிமிடத்துக்குள் அவர்கள் வருகைதராவிட்டால் அவர்களுக்கு உடன் இடமாற்றம் வழங்கப்படும் எனக் கடும் தொனியில் எச்சரித்தார்.

எனினும் 15 நிமிடங்கள் கழித்து பொலிஸ் நிலையத்தின் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே வருகைதந்திருந்தனர்.

அவர்களிடம் வினவியபோது, பொறுப்பதிகாரி கூட்டம் ஒன்றுக்குச் சென்றுள்ளார் என்றும் பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே கடமையிலுள்ளார் என்றும் எமக்கு உள்ளகசோதனை இடம்பெறுவதாகவும் தெரிவித்தனர்.

அதற்கு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், பொலிஸாருக்குப் பொறுப்பான விடயதானங்கள் கலந்துரையாடலில் அவர்கள் பங்கேற்காதுவிடின் பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று எச்சரித்துப் பொலிஸாரை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பிவைத்தார். (ச-125)



# நாட்டில் பிறப்புவீதம் உயர்வடையவேண்டும்

## குடும்பநல உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

இலங்கையில் பிறப்புவீதம் குறைவடைந்து செல்கின்றது. சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இவற்றைத் தவிர்ப்பதற்கு காத்திரமான செயன்முறையொன்றை வகுக்கவேண்டும் என்று குடும்பநல உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர்கள் தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குழந்தைகளைப் பெற்றெடுப்பதில் பெற்றோர் இப்பொழுது தாமதம்காட்டி வருகின்றனர். உண்மையில் பொருளாதாரப் பிரச்சினை இதற்குக் காரணமாக அமைகிறது.

மேலும் சிறுவர்கள் போஷாகின்மையால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த அரசாங்கம் சிறுவர்களுக்குத் திரிபோஷாவை வழங்குவதைக் குறைத்துள்ளது. அதற்குத் தட்டுப்பாடும் காணப்படுகின்றது. அரசாங்கம் இதற்கான மாற்றுவழியினை கண்டுபிடிக்கவேண்டும் - என்றார். (ச-125)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலி, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பல்கலைகளின் பட்டங்கள் ஆய்வுப் பணிகள் ஆரம்பம்!


## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 16**
**தனியார் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் பட்டங்களின் தரம் குறித்து முறையான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சு வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைந்த உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம் குறித்து கல்வி அமைச்சு முறையான ஆய்வு ஒன்றை ஆரம்பித்துள்ளது.
இந்த நிறுவனங்களில் கல்வியியல் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் தகுதிகள், குறிப்பாக இலங்கை ஆசிரியர் சேவையில் நியமனம் பெறுவதற்கான தகுதி மற்றும் பொருத்தப்பாடு தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளன. சமீபத்திய ஆசிரியர் நியமனங்கள் முந்தைய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சேவை விதிமுறைகளுக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டன.
எனினும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மை தற்போது கல்வி அமைச்சின் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைக்கான நியமனங்கள் இந்தத் தர ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-இ)

# அச்சுவேலிப் பிரதேசத்துக்கு நிரந்தர தபாலகம் வேண்டும்

அச்சுவேலிப் பிரதேசத்துக்கு நிரந்தர தபாலகக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அச்சுவேலி தபால்நிலையத்துக்கு நிரந்தர தபாலகக் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் காணியினுள் தபாலகம் அமைப்பதற்கு இதுவரை தபால் திணைக்களம் முன்வர வில்லை. எனவே இதுதொடர்பில் கவனம் செலுத்தி புதிய தபாலகக் கட்டடம் ஒன்றை அமைத்துத்தர முன்வரவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-125)



# 55 அம்புலன்ஸ் சாரதிகள் பணிநிலை வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
55 அம்புலன்ஸ் சாரதிகளுக்கான வெற்றிடம் நிலவுவதாக தெல்லிப்பழைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பரா நந்தகுமார் பிரதேச ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். சுகாதாரப் பிரிவில் இன்றியமையாத ஒரு சேவையாக அம்புலன்ஸ் சேவை காணப்படுகின்றது. அந்தச் சேவையை மென்மேலும் விருத்திசெய்யவேண்டும். தற்போது அம்புலன்ஸ் சாரதிகளுக்கு 55 பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பவானந்தராஜா விசேட முன்மொழிவைக் கொண்டுவந்து வெற்றிடங்களை நிரப்ப முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

**தனியார், வெளிநாட்டு**

# பட்டதாரிகளுக்கு நியமனம் ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஜீன் 16
தனியார் பல்கலைக்கழகங்களிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கல்விமாணிப் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
பிரதமர் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் சற் புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு நான்கு வருடங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர். தனியார் பல்கலைக்கழகங்களிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் ஆறு மாதம் ஒரு வருட காலப்பகுதியில் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.
வெறுமனே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்த காரணத்துக்காக தனியார் பல்கலைக்கழகங்களிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கல்விமாணிப் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

# நேபாளத் தூதுவருடன் பிரதமர் சந்திப்பு

கொழும்பு, ஜுன் 16
இலங்கைக்கான நேபாளத் தூதுவர் பூர்ணா பகதூருக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கையில் வசிக்கும் நேபாள நாட்டினர் எதிர்கொள்ளும் விசா தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது நேபாளத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நேபாளத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். (ச-26)






## 'சொல்வதெல்லாம் பொய்!'

**பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடைக்காது எண்டுறதெல்லாம் அந்தக் காலம். இப்ப பொய் சொல்லுறவைதான் பொறுப்பான பதவியளில இருக்கினம். பள்ளிக்கூடத்தில எப்பிடிப் பிள்ளையள் ரீச்சர்மாருக்குப் பயத்தில வீட்டுவேலையள் செய்தனாங்கள் எண்டு சொல்லித் தப்ப வெளிக்கிடுவினமோ, அப்பிடி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில பொய் சொல்லித் தப்பியிருக்கிறா ஒரு வலயக் கல்விப்பணிப்பாளர்.**

**அந்த வலயத்தில இருக்கிற சின்னப் பள்ளிக்கூடமொண்டில நிரந்தரமான அதிபர் இல்லயெண்டும், 200 பிள்ளையளுக்கு மேலபடிக்கிற அந்தப் பிரைமறி ஸ்கூலுக்கு நிரந்தர அதிபரைப் போடச்சொல்லி நாலைஞ்சு மாதத்துக்கு முதல் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில கோரிக்கை வைச்சவை. அப்ப அந்த வலயப்பணிப்பாளர் - இப்ப எலக்சன் அறிவிச்சிட்டினம், அதால புது நியமனம் ஒண்டும் செய்யேலாது. எலக்சன் முடிஞ்ச கையோட அந்தப் பள்ளிக்கூடத்துக்கு நிரந்தர அதிபரைப் போடுறதுதான் முதல்வேலை எண்டு வாக்குறுதி குடுத்தவா. ஆனால் போன கிழமை திரும்பவும் அதே பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடக்கேக்கையும் அந்தப் பள்ளிக்கூடம் பதில் அதிபரோடதான் இயங்கிக்கொண்டு வருகுது. அதை இந்தமுறை ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டத்தில எம்.பி. ஒருத்தரும் கேட்டவர். அதுக்கு அந்த வலயப்பணிப்பாளர் 'இன்ரர்வியூ முடிஞ்சுது. ஒரு கிழமைக்குள்ள அங்க புது அதிபரைப் போட்டிடுவம்' எண்டு சொன்னவா. எண்டாலும் அவா போனமுறை மாதிரி பொய்தான் சொல்லுறாவோ எண்ட சந்தேகத்தில,**

**மாகாணப் பணிப்பாளரிட்ட இதைப் பற்றிக்கேக்க 'வாற கிழமை புது அதிபரைப் போட வேலை நடந்துகொண்டிருக்கு' எண்டு அவை உறுதிப்படுத்தின பிறகுதான் வலயக் கல்விப்பணிப்பாளர் சொன்னதை நம்பமுடிஞ்சது.**

**ஆனால் அவா இந்தமுறை வேறை ஒரு பள்ளிக்கூட விசயத்தில பொய் சொல்லி மாட்டுப்பட்டிட்டா. அதே வலயத்தில, இந்தப் பிறைமரி ஸ்கூலுக்குக் கிட்ட உள்ள பெரிய பள்ளிக்கூடம் ஒண்டில ஏ.எல். பிள்ளையளுக்கு 'பயோலொஜி' ( உயிரியல்) பாடம் படிப்பிக்கிற ரீச்சர் இல்லை. அதால அங்க 'பயோ' படிக்கிற பிள்ளையள் யாழ்ப்பாணத்தில இருக்கிற ரியூசனுக்குப் போறதுக்காக, அரைநேரத்தோடையே பள்ளிக்கூடத்தில இருந்து வீட்டை வெளிக்கிடுகினம். பள்ளிக்கூடத்தில அந்தப் பாட ரீச்சர் இல்லாதபடியால பள்ளிக்கூட நிர்வாகமும் அதுக்கு அனுமதி குடுக்கவேண்டி இருக்கு. ஒவ்வொரு வருசமும் அந்தப் பள்ளிக்கூடத்தில இருந்து மெடிசினுக்கு மூண்டு, நாலு பிள்ளையளாவது போகினம். இப்பிடிப்பட்ட நிலையில முக்கியமான பாடத்துக்கு ரீச்சர் இல்லாட்டி எப்பிடி நல்ல ரிசல்ட் வரும்? அதை இந்தமுறை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில சொல்ல, 'இதெல்லாம் தீர்த்தாச்சு. அந்தப் பாடத்துக்கு நாங்கள் உரிய ரீச்சரைப் போட்டிட்டம்' எண்டு வலயக் கல்விப்பணிப்பாளர் 'கூலா' பதில் சொல்லிப்போட்டு போட்டா. ஆனால் விசயம் என்னெண்டால், அந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஆரம்பப்பிரிவுப் பிள்ளையளுக்கு சயன்ஸ் பாடத்துக்குத்தான் ரீச்சரைப் போட்டிருக்கினமாம். பயோ பாடத்துக்கு இன்னும் ரீச்சரைப் போடேலை. ஆனால் வலயக் கல்விப்பணிப்பாளரோ, ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைச் சமாளிச்சால் காணும் எண்ட நினைப்பில வாய்க்குவந்த பொய்யைச் சொல்லி தப்பிப்போட்டா. 'பொய் சொல்லக்கூடாது பாப்பா' எண்டு பிள்ளையளுக்குச் சொல்லிக்குடுத்தால் மட்டும் காணாது, பொறுப்பான ஆக்கள் அதைப் பின்பற்றவும் வேணும் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய் வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். மாலையில் எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன், சிலர் கடன்வாங்கவும்நேரிடும்.

**இடபம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும்வாய்ப்புஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். வாழ்க்கைத் துணைவழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்றுவருவீர்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.



# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி !

கிளிநொச்சி, ஜூன் 16

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இல்லத்தின் தலைவரும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத் திட்டமிடல் பதில் பணிப்பாளரும் மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளருமான சரவணபவன் மோகனபவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாஸ், கரைச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் தர்மரத்தினம், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர், அதிபர் தெய்வேந்திரம் சசிரங்கன், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மூத்த ஆலோசகர் சாந்தினி சக்திவேல், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், இல்ல முகாமைத்துவக்குழு உத்தியோகத்தர்கள், பெற்றோர், பழையமாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-22,113)

# வேகநடைப் போட்டியில் யாழ்.யுவதி வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜூன் 16

தேசிய ரீதியாக நடைபெற்ற 10 ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் யாழ்ப்பாணம் - பொன்னாலைப் பகுதியைச் சேர்ந்த தமிழரசி ஜீவேஸ்வரன் மூன்றாவது இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தை தன்வசப்படுத்தியுள்ளார். இந்தப் போட்டியில் முப்படை வீரர்கள் உட்பட ஏனைய போட்டியாளர்கள் பங்கேற்றனர். (ச-41-27)



# வவுனியா தெற்கு வலய விளையாட்டுப்போட்டி

வவுனியா, ஜூன் 16

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகள் உள்ளடங்கலாக 102 பாடசாலைகள் பங்குபற்றும் வலயமட்ட விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பும், சாரணர்களின் அணிவகுப்பும், உடற்கல்வி ஆசிரியர்களின் அணிவகுப்பும், விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பும் இடம்பெற்றன. அத்துடன், கடந்த ஆண்டு வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து தேசிய ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டு சாதனைபடைத்த விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-33)



# வல்வை இரத்ததானச் சங்கம் கொழும்பில் கௌரவிப்பு!

கொழும்பு, ஜூன் 16

தன்னார்வக் குருதிக்கொடையாளர்களை இணைத்து குருதிக்கொடை முகாம்களை ஒழுங்கமைத்துவரும் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் செயற்பாட்டைக் கௌரவிக்கும்வகையில் கொழும்பு - 3 இல் அமைந்துள்ள அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் நினைவுச்சின்னமும் சான்றிதழும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது. உலக குருதிக் கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு இலங்கைத் தேசிய இரத்தவங்கியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறப்புக் கௌரவிப்பாளர்களில் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம் சார்பில் அதன் தலைவர் பாலச்சந்திரமூர்த்தி வீரசுரேந்திரன் கௌரவிக்கப்பட்டார். (ச-41-100)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகினால் புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணியும் கொடிதின சேமிப்புப் பவனியும் கடந்த வெள்ளிக்கிழமை கைதடி நகரப்பகுதியில் இடம்பெற்றன. (ச-41-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒன்றுக்கும் பயனற்றவர் என்று தள்ளிவிடும்படியாக எவரும் இல்லை. சமயம் வரும்போது வேறு ஏதாவது ஒரு வகையில் எவரும் பயன்படக்கூடும்.

– ஹென்றி போர்ட் –

## வெள்ளையானைக்கு உயிர்கொடுக்கமுடியுமா?

யாழ்ப்பாணம், மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் மீண்டும் பேசுபொருளாகியிருக்கிறது. 200 மில்லியன் ரூபா நிதியில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெருமெடுப்பில் திறக்கப்பட்ட இந்த விசேட பொருளாதார மையம் இன்று பாழடைந்து 'பறவைகளின் கூடாரமாக' மாறியிருக்கிறது. இந்த நிலையில், அந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மீண்டும் திறக்கப் போவதாக அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்திருக்கிறார். 'வெள்ளையானை போல' 200 மில்லியன் ரூபாவை விழுங்கிவிட்டு, பாழடைந்துபோய் படுத்திருக்கும் பொருளாதார மத்தியநிலையத்தை இயங்குநிலைக்குக் கொண்டுவருவதென்பது நல்ல விடயம்தான். ஆனால் அதற்கு முன்னதாக, இந்தப் பொருளாதார மத்தியநிலையம் ஏன் இதுவரை இயங்காமல் இருந்தது? அதன் பின்னணி என்ன? உண்மையிலேயே இது பொருளாதார மத்திய நிலையம் ஒன்றுக்கான சகல வசதிகளையும் கொண்டது தானா? என்பது குறித்தும் அரசாங்கம் ஆய்வு செய்வது அவசியமானது.

மக்கள் நடமாட்டம் மிகக்குறைந்த, சுற்றிலும் வெட்டவெளியைக்கொண்ட, போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாத இந்தத் தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்துக்கு எவர்தான் விரும்பி வருவார்கள்? இந்த இடம் பொருளாதார மத்திய நிலையத்துக்குப் பொருத்தமான இடமல்ல என்று மக்களும், துறைசார் ஆர்வலர்களும் படித்துப் படித்துச் சொன்னார்கள். ஆனால் அதை யார்தான் காதுகொடுத்துக் கேட்டார்கள்? எல்லாமே புறக்குடத்து நீரானது தான் மிச்சம். மக்களின் அபிப்பிராயத்தை உதாசீனம் செய்தால், என்ன நடக்கும் என்பதற்கு உதாரணமாக மாறி, எந்தப் பயனுமற்ற ஒரு 'கட்டட நடைப்பிணமாகியிருக்கிறது' இந்த மையம். எனவே மீண்டும் அதே இடத்தில் பொருளாதார மத்தியநிலையத்தை திறந்தாலும் இதேகதைதான் தொடரப்போகின்றது. 'நாங்கள் பொருளாதார மத்தியநிலையத்தை மீள இயங்கவைத்தோம்' என்று சொல்லி வாக்குகளைப் பெற மட்டுமே இந்த மத்தியநிலைய மீள்திறப்பு உதவுமேதவிர உருப்படியாக எந்தப்பயனையும் தரப் போவதில்லை.

அப்படியானால் என்ன செய்யவேண்டும்? இந்தப் பொருளாதார மத்தியநிலையத்தில் என்னென்ன குறைபாடுகள் உள்ளனவோ அவற்றை நிவர்த்தி செய்த பின்னரே அதனை முழுமையாக இயங்கவைக்க வேண்டும். குறைந்தபட்சம் பொருளாதார மத்திய நிலையத்துக்கு எல்லோரும் சென்றுவரக்கூடிய வகையில் போக்குவரத்து வசதி செய்யப்படவேண்டும். புதிய தொழில்முயற்சியாளர்கள், வணிக நிலையங்கள் என்பவற்றை பொருளாதார மத்தியநிலையத்துக்கு அருகில் அமைப்பதற்கு அரசு ஊக்குவிக்க வேண்டும். வேண்டுமானால் குறித்த இடங்களில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கு விசேட மானியங்கள், உதவிகளையும் அரசாங்கம் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கலாம். அவ்வாறு செய்தால் சனப்புழக்கமுள்ள, வணிக மையங்கள் சூழ்ந்துள்ள பகுதியாக அந்த இடம் மாறும். பின்னர் இயல்பாகவே பொருளாதார மத்தியநிலையம் வெற்றிகரமாக இயங்கத்தொடங்கிவிடும். அவ்வாறான போக்குவரத்து வசதிகளையோ, தொழில்முனைவுகளையோ இங்கு ஏற்படுத்துவது இப்போதைக்கு சாத்தியமில்லையெனில், குறித்த கட்டடத்தை வேறு பொருத்தமான தேவைக்காகப் பயன்படுத்த வழங்கிவிட்டு, பொருளாதார மத்தியநிலையத்தை அதற்குத் தகுந்த இடமொன்றைத் தெரிவுசெய்து, அங்கு இயங்கவைப்பதே புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும். அதைவிடுத்து, எந்தக்குறைகளையும் சீர்செய்யாமல் அரசியல் நோக்கத்துக்காக, இந்தப் பொருளாதார மத்தியநிலையத்தை திறந்தால், மத்தள விமானநிலையம், அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்பவற்றின் வரிசையில் பயனற்ற ஒன்றாக மாறிவிடும் அபாயமுண்டு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## பணிப்பகிஷ்கரிப்புக்குத் தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**கொழும்பு, ஜூன் 16**

**மருத்துவர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக வெளியிடப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சமில் விஜேசிங்க தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான திருத்தங்களை அரசாங்கத்திடம் கோரி வருகின்றோம். இந்தக் கொடுப்பனவு, மருத்துவர்கள் மேற்கொள்ளும் மேலதிக பணிச்சுமைக்கு ஈடாக வழங்கப்படும் நிதி உதவியாகும். எனினும், இதற்கான சுற்றறிக்கைகள் இதுவரை உரியமுறையில் வெளியிடப்படவில்லை.

அரச மருத்துவர்களின் கூடுதல் கடமைகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவேண்டும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படாவிட்டால், எமது சங்கம் ஜூன் 30ஆம் திகதிக்குப் பின்னர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும். இது நோயாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினாலும், அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கையின்மையே இதற்குக் காரணமாக இருக்கும்- என்றார். (ச-இ)



## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 16

ஜேர்மனிக்கு உத்தியோக பூர்வ விஜயத்தைமேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர, ஜேர்மன் ஜனாதிபதி ப்ராங்க்வால்டர் ஸ்டெயின்மயர், வெளியுறவு அமைச்சர் ஜோஹான் வாடெபுல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ரீம் அலபாலிராடோவான் ஆகியோருடன் இருதரப்புக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். (ச-இ)

## பொலிஸார் இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை பொலிஸ் சேவையில் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் 6 பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும், பல தடவைகளாக, பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் இடமாற்றங்கள், மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## இம்மாதத்தில் இதுவரை 40,000 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூன் 16

ஜூன் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 43,962 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து அதிகளவாக 12,362 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். இதேவேளை 2025 ஆம் ஆண்டில் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,073, 765 ஆக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பொதுமன்னிப்பு விவகாரம் கைது நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் முறைகேடு செய்தவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்துள்ளார். 2024ஆம் ஆண்டு நத்தார் தின பொதுமன்னிப்பு, சுதந்திர தின பொதுமன்னிப்பு, அண்மைய வெசாக் தின பொதுமன்னிப்பு போன்ற பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட சம்பவங்களில் 68 பேர் முறையற்றவகையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். வெசாக் தினத்தன்று மூன்று பேர் முறையற்றவகையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

நாளை

செவ்வாய்க்கிழமை- ஆனி 03

17.06.2025

சுபநேரம் : 10.23- 11.53

ராகுகாலம் : 02.53-04.23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் இரதோற்சவ பெருவிழா அண்மையில் சிறப்பாக இடம் பெற்றது. (ச-125)

# மயிலிட்டி மருத்துவமனையை தரமுயர்த்த நடவழிக்கை எடுங்கள்

*பிரதேச மக்கள் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், ஜூன் 16**

**மயிலிட்டி ஆரம்ப மருத்துவமனையை தரமுயர்த்துமாறு தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
மயிலிட்டி மருத்துவமனை 24 மணிநேரசேவையை வழங்கும்முகமாக தரமுயர்த்தப்படவேண்டும். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மாத்திரம் மக்கள் நம்பி இருக்காது மயிலிட்டி ஆரம்ப மருத்துவமனையையும் மேம்படுத்தவேண்டும். தெல்லிப்பழை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் காணப்படுகின்ற அம்புலன்ஸ் வண்டி ஒன்றை மயிலிட்டி மருத்து வமனைக்கு வழங்கவேண்டும். இதன்மூலம் உயிராபத்துகள் ஏற்படுகின்றபொழுது அதனைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில் கவனத்தில் எடுப்பதாக தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் மருத்துவர் பவானந்தராஜா தெரிவித்தார். (ச-125)

# யாழ். சிறையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 100 ஆவது சிறைச்சாலை உத்தியோகத்தர் அணியின் 10 ஆவது ஆண்டு சேவைக்கால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் இரத்ததானமுகாம் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் மற்றும் பிரதான ஜெயிலர் ஜெயவர்தன ஆகியோரின் நெறிப்படுத்தலுடன் அண்மையில் இடம்பெற்றது. இதில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் குருதிக் கொடையளித்தனர். (ச-125,22)



# தெல்லிப்பழையிலுள்ள அறநெறிப் பாடசாலைகளை வினைத்திறனுடையதாக மாற்றுக!

யாழ்ப்பாணம், ஜூன் 16
தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் காணப்படும் அறநெறிப்பாடசாலைகளை வினைத்திறனுடன் இயங்கச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெல்லிப்பழைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பரா நந்தகுமார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.
தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 40 அறநெறிப் பிரிவுகளில் 25 அறிநெறிப் பாடசாலைகள் மாத்திரமே இயங்குகின்றன. இரண்டு பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பொழுதிலும் இயங்காத ஏனைய 13 பிரிவுகளிலும் அறநெறிப்பாடசாலைகளின் கல்வியை ஊக்குவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

# எமது காணிகளே எமக்கு வேண்டும்!

*பலாலியில் காணியிழந்த முதியவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 16
பலாலி விமானநிலையம் அமைந்துள்ள காணியை விடுத்து ஏனைய எமது காணிகளை விடுவித்துத் தாருங்கள். எமக்கு எமது காணிகளே வேண்டும் என்று பலாலி விமான நிலையத்துக்காக காணியை இழந்துள்ள 76 வயதான காணி உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
45 வருடங்களுக்கு முதல் இங்கிருந்து இடம்பெயர்ந்தேன். பல்வேறு ஆட்சியாளர்கள் தங்களுக்கு வாக்களியுங்கள் விடுவிப்போம் என்றனர். ஆனால் இன்றுவரை எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை. புதிய அரசாங்கத்திலும் எமது காணிகளுக்குத் தீர்வுகாணப்படவில்லை. பலாலி விமானநிலையத்துக்கும் எனது காணிக்கும் பெரும் இடைவெளி உள்ளது. எனது காணியில் இராணுவம் விவசாயம் செய்கின்றது. இரண்டு விமானங்கள் ஓடும் விமானநிலையத்துக்கு எதற்கு எமது காணிகள்? எமது காணிகள் எமக்குவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், உங்களுடைய உணர்வுகள் எமக்கு புரிகின்றது. சர்வதேச விமான நிலையத்துக்கு காணிகள் தேவை. விமானநிலையத்தின் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக்காணிகள், நட்டஈடு வழங்குவோம் - என்றார். (ச- 125)

# சங்கானை மருத்துவமனை முன் பாதசாரிக்கடவை அமையுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
சங்கானைப் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக பாதசாரிக் கடவை ஒன்றை அமைத்துத்தருமாறு சங்கானைப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஆளுநர் அலுவலகம், பிரதேச செயலகம் என பலதரப்பட்ட அரச சார் திணைக்களங்களுக்கும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தபொழுதிலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.
ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கமைவாக குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
இதன்போது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.
இது தொடர்பில் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர். (ச-125)




# சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை

யாழ்ப்பாணம், ஜூன் 16
தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நிலையான சமாதானத்துக்கான மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும்நோக்கில் சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து ஆரம்பமானது. தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச்சென்று இளைஞர்களுக்கு நிதி உதவி வழங்கல், கருத்துரைகள் என்பன இடம் பெற்றதைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. யாழ். மாவட்ட இளைஞர்கள் சேவை மன்றப் பணிப்பாளர் வினோதினி சிறிமோகன் தலைமையில் ஆரம்பமான பாதாயாத்திரை நிகழ்வில் வடக்கு மாகாண இளைஞர்கள் சேவை மன்றத்தின் பணிப்பாளர் ஜெமினி சந்திரசேகர பிரதம விருந்தினராக க் கலந்துகொண்டு யாத்திரிகர்களை வழியனுப்பி வைத்தார். (ச-66-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 03 . 1933



மறைவு 11 . 06 . 2025

## வரப்பிரகாசம் ஆரோக்கியநாதர்

பலாலியை பிறப்பிடமாகவும் 1ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் ஆரோக்கியநாதர் (சம்மாட்டியார்) அவர்கள் கடந்த (11.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசம் அன்னம்மாவின் புதல்வரும், காலஞ்சென்ற மரியநாயகியின் அன்புக் கணவரும், ஜெனோவா, சூசைநாதன், ஜெனிஸ்ரெலா, அமலதாசன், ஜெசிந்தா, ஜெயசீலியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஸ்ரின் யோகராணி, சகாய சேவியர், மேரி வாணிஸ்ரா, மரிய துரை ஆகியோரின் அன்பு மாமனாரும் யோபுநாதன், ஜெகநாதன், ஜெனிக் நாதன், அனுசியா, ஜென்சியா, சில்வியா, மரியா நாயகி, மீகன், மெலிசா, லூசிகன், ஜால்சன், ஜனேசா, மரின் ஜெபஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.06.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 11.00 மணியளவில் பலாலி ஆரோக்கிய மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து பலாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 6365 733**
**077 354 3847**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1942



மறைவு 14 . 06 . 2025

## பண்டிதர் வீ. பரந்தாமன்

புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமன் நேற்று முன் தினம் (14.06.2025) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை - பார்பதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சொர்ணாம்பிகையின் அன்புக்கணவரும், முல்லை (மருத்துவர், ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை), பொன்முடி (ஆசிரியர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அந்தணன், புலவன் (நில அளவையாளர் - சிறப்பு நில அளவைப்பிரிவு வடமாகாணம்) ஆகியோரின் தந்தையும், பரமேஸ்வரன் (ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், கைதடி), ராகவன் (தொழிற்றுறை மேம்பாட்டு அலுவலர்), பிறிஷானி (வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை) ஆகியோரின் மாமனாரும், கணியன், மாதுளன் (கொமர்ஷல் வங்கி), சேந்தன் (மருத்துவபீடம் பேராதனை), நிலவன், அங்கணன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சிறிஅகிலாண்டதரநாதன், மற்றும் செ.கிருஷ்ண வேணி, சிறிஜெக்ரட்சகமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்), சிறிஅனாதரட்சகமூர்த்தி, சிறிஞான சுந்தரம் (கலாராஜன் - கனடா), காலஞ்சென்ற சிறிவீரகனக குமார், கிருஷ்ணராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்கமானது இன்று (16.06.2025) திங்கட் கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

"தமிழ் வளர் சோலை"
புலோலி தெற்கு
புலோலி

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 728 6160**

(CS 3410) E-1

## பலத்தகாற்று எச்சரிக்கை

இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் தற்போது நிலவும் வலுவான காற்று மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக காலநிலை அவதான நிலையம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சிலாபம் முதல் காங்கேசன்துறை வரை (புத்தளம், மன்னார் வழியாக) மற்றும் காலி முதல் பொத்துவில் வரை (அம்பாந்தோட்டை வழியாக) உள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கடல் மிகவும் கொந்தளிப்பாகவும், அபாயகரமாகவும் காணப்படுகிறது.

அதனால், மறு அறிவிப்பு வரும்வரை மீனவர்களை கடல் பகுதிக்குள் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# ஈராண்டு நினைவஞ்சலி

## நற்குணராசா குகதீஸ்

**(பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடம் முதலாம் வருடம்)**



பேராதனை தன்னில் பொறியியல் கற்று
பேரோடும் புகழோடும் பதவியில் உயர்ந்து
பண்பாளனாய் பாரினில் திகழ்வாயெனும் கனவு
பாதியினில் கலைந்து பாழாய்ப் போனதுவோ?

ஆதாரம் நீயென நம்பிய வேளை
நிராதாரமாய் நிற்கவைத்தாயே ஜயா
தஞ்சமின்றி நெஞ்சமது கலங்கிட
துஞ்சும் எங்கள் நிலை நீ காண்பாயோ?

உயர்கல்வி தொடர உம்பகுலகுதான்
உவப்பென்று சென்றாயோ? ஈராண்டு போயிடினும்
உலரா ஈரம் விழிகளில்! ஆறாப்புண்கள் நெஞ்சினில்!
உன் ஆத்ம சாந்திக்காய் திக்கில் முருகனைத்
தொழுகின்றோமே!

மண்ணில் 21.11.2001
விண்ணில் 16.06.2023

கரம்பைக்குறிச்சி மேற்கு,
வரணி.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் போதைப்பொருள்; இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தவாரம் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

விசாரணைகளில் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கந்தரோடையில் 25 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 50 கிராம் ஹெரோய்ன் மற்றும் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## வவுனியா வடக்கு பிரதேச சபை - நெடுங்கேணி வரலாற்றுச் சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான அறிவித்தல்.

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 23.06.2025 ஆம் திகதி அன்று இடம்பெறவுள்ளது. குறித்த பொங்கல் விழாவின்போது பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் வருமாறு.

1. உணவு கையாளுகின்ற அனைவரும் மருத்துவ பரிசோதனை சான்றிதழை வைத்திருப்பது கட்டாயம் என்பதுடன் உணவுப்பொருட்களைக் கையாளுகின்ற சகல வர்த்தகநிலையங்களும் பிரதேச சபையினது அனுமதியினைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இதற்காக அனுமதிகளை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் தற்காலிக பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஆலயத்திற்கு வருகைதருகின்ற அனைத்துப் பக்தர்களுக்குமான குடிநீர் வசதி. மலசலகூட வசதி. வீதி ஒழுங்கமைப்பு மற்றும் வாகனத் தரிப்பிட வசதி என்பன பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.
3. தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டுள்ள ஆடம்பரப் பொருட்களுக்கு எமது சபையினால் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்பதனை கருத்திற் கொள்ளவும். குறிப்பாக (முச்சக்கர வண்டியில் பொருத்தப்படுகின்ற Audio Players மற்றும் Speakers)
4. வாகனங்களில் பாதுகாப்பற்றவகையில் பொருத்தப்பட்டுள்ள பற்றறிகள் களவு போகாதவகையில் அவற்றை பாதுகாப்பதற்கு ஏதுவான வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
5. பொதுமக்கள் தமது பெறுமதி மிக்க பொருட்கள். ஆபரணங்கள் களவு போகாத வகையில் அவற்றை பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
6. ஆலய வளாகம் புனிதப்பிரதேசம் என்பதனால் குப்பைகளை போடுவதற்கு குப்பைத்தொட்டிகளை பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**சோ.மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

(CR/45164) J-1

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## விக்னேஸ்வரன் அபிநயன்



அபி நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்று இன்றோடு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும் நீ எங்களுக்குள் வாழ்கிறாய். தினம் தினம் எங்களோடு உரையாடுகிறாய். 23 வருடம் ஒரு குறையின்றி உனை பாதுகாத்து வந்தோமே ஏனிந்த அவசரம் எம்மை விட்டு பிரிந்து செல்ல விதியென்பதா? காலன் செய்த சதியென்பதா? அம்மா, அப்பா, அண்ணா அன்பு காட்டிய எங்கள் முத்தான சொத்தே பறிகொடுத்துவிட்டு ஏங்குகிறோம் நாமிங்கு. உடன் பிறந்த உறவுகளும் ஏங்குகிறோம்.

**என்றும் உன் நினைவோடு**
**குடும்பத்தினர்**

(CS/58518) J-1

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- **றொமினி ஐசிந்தா தனநாயகம்**

விண்ணப்பதாரர் பெயர் :- றொமினி ஐசிந்தா தனநாயகம்

முகவரி :- ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, அமலி வீதி ஆதன இல. 35இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 12.09.2024 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திரு. நாகேந்திரன் பார்த்தீபன் அவர்கள் முகதாவில் இலக்கம் 40 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.தவேந்திரா அவர்களால் அளந்து வரைந்த 834 ஆம் இலக்க 25.07.2023 ஆம் திகதி நில அளவைப்படத்தில் துண்டு - 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை "காடாவட்டைத் தோட்டம்" நிலப்பரப்பு மூன்றும் குளி பத்து தசம் மூன்று இரண்டும் (நில.பர 3 குளி 10.32) இது தெல்லிப்பளை மாவிட்டபுரம் தெற்கு (J/234) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு :- பிரதேசசபை வீதியும்,ஜொன்பிள்ளை கிளாரம்மாவின் ஆதனமும்
வடக்கு :- வீதி
மேற்கு :- பிரதேசசபை வீதி
தெற்கு :- கருணேஸ்வரன் ராசிரூபன் இன் ஆதனமும்

மேற்குறித்த ஆதனத்தை **றொமினி ஐசிந்தா தனநாயகம்** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சிவகுமாரன் சிவானந்தன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




எமது பாடசாலையில் பத்து வருடங்கள் அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றிய எமது உப அதிபர்

**திரு மகாலிங்கம் ஸ்ரீபாஸ்கரன்**

(SLTS - I, HNDA, Commerce Trd)

**சேவை விபரம்**

01.09.1992 - 31.12.1995 - ஆசிரியர் (யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
01.01.1996 - 08.02.2015 - ஆசிரியர் (யா/டிறிபேக் கல்லூரி சவகச்சேரி)
09.02.2015 - இன்றுவரை - உப அதிபர் (யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்)

அவர்களது சேவையினைப் பாராட்டுவதோடு ஓய்வுக் காலத்தில் சகல செல்வங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் என்றென்றும் மகிழ்வுற்றிருக்க உளநிறைவோடு வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் ஹெலி விபத்து; குழந்தை உட்பட 7 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 16



இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த உலங்குவானூர்தியில் குழந்தை ஒன்று உட்பட 6 பேரும், விமானி ஒருவரும் பயணித்துள்ளனர்.

புனிதத் தலமான கேதார்நாத் என்ற பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தபோதே, இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அங்கு நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் - நாகேந்திரம் சிவகுமார் பெண் செல்வராஜினி
விண்ணப்பதாரர் பெயர் - திருமதி செல்வராஜினி சிவகுமார்
முகவரி - புதுவீதி, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, புது வீதியில் ஆதன இல. 127/62 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "உடவன்பாலை" என்ற ஆதனம் திருமதி R. நாகரட்ணம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 2005.07.06ம் திகதி 5043ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடையளிப்பு படி அளவெட்டி இறை "உடவன்பாலை" நிலப்பரப்பு 5 குளி 2 2/7 விஸ்தீரணம் உள்ள ஆதனம் விண்ணப்பதாரரான நாகேந்திரம் சிவகுமார் பெண் செல்வராஜினிக்கு சொந்தமாகியது.

மேற்குறித்த 5043 ஆம் இலக்க உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H795/125 ஆம் இலக்க காணிப்பதிவுப் புத்தகத்தின் பிரதி இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 5043 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளாக 1979/05/27, 1983/10/03, 1984/02/05, 1986/11/03, 1944/03/08 ஆகிய திகதிகளில் பிரசித்த நொத்தாரிசுகள் முறையே வ.தம்பிப்பிள்ளை, கு.கனகசபை முகதாவில் 3245ம் 5234ம் 6660ம் 916ம் இலக்கங்களில் நிறைவேறிய முறையே நன்கொடை, பிரிவிடுதல், சீதன, அறுதி உறுதியாளர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த உறுதிகளின் மூலம் இவ்வாதனத்தை விண்ணப்பதாரருக்கு நன்கொடை அளித்த கணபதிப்பிள்ளை துரைரத்தினம் கைம்பெண் தில்லையீஸ்வரியை வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த உறுதிகளில் 916ம் இலக்க உறுதி 5444ம் இலக்க உறுதியின் தாய் உறுதியாகும். மேலும் 6660ம் இலக்க உறுதி மூலம் "உடவன்பாலை" என்ற ஆதனத்தின் நிலப்பரப்பு 02 குளி 12 2/7 இல் சொரியல் 1/2 பங்கும், 5444ம் இலக்க உறுதி மூலம் நிலப்பரப்பு 01 குளி 15 இல் சொரியல் 1/6 பங்கும், 5234 ஆம் இலக்க உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 2/7 இல் சொரியல் 1/2 பங்கும் 3245 ஆம் இலக்க உறுதி மூலம் நிலப்பரப்பு 01 குளி 04 உம், நிலப்பரப்பு 01 குளி 15 இல் சொரியல் 1/3 பங்குமாக நிலப்பரப்பு 04 குளி 14 29/77 கணபதிப்பிள்ளை துரைரத்தினம் கைம்பெண் தில்லையீஸ்வரி என்பவருக்கு உரியதாகும். குறித்த தாய் உறுதிகளில் நிந்தபாகங்களும், சொரியல் பாகங்களுமாக காணப்பட்ட ஆதனங்கள் பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேறிய 5043ஆம் இலக்க உறுதி மூலம் ஒன்றாக்கப்பட்டு நிந்தமாக்கப்பட்டுள்ளதுடன் நிலப்பரப்பு 5 குளி 2 2/7 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 5043 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் வரையப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.தவராஜா அவர்களின் 5689ஆம் இலக்க 24.04.2024 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தில் ஆதன விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 3 எனக்குறிப்பிட்டுள்ளது. 5234 ஆம் இலக்க உறுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற 2830ஆம் இலக்க தத்துவ வழக்கு தொடர்பில் குறிப்பிட்ட போதிலும் குறிப்பிட்ட வழக்கின் பிரதியோ அல்லது தீர்வையின் பிரதியோ இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை.

## ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "உடவன்பாலை" நிலப்பரப்பு ஒன்று குளி நான்கு உம் (நிலப்பரப்பு 01 குளி 04) (பதிவு H357/213) அதே இறை அதே பெயருடைய காணி நிலப்பரப்பு 01 குழி 15ற் சொரியலாக 2/3 பங்கும், (பதிவு H213/315) அதே இறை அதே பெயருடைய காணி நிலப்பரப்பு 02 குழி 12 2/7ம் (பதிவு 624/46) சேர்ந்து தற்போது ஒரே காணியாக மேற்படி இறை உடவன்பாலை நிந்தமாக நிலப்பரப்பு ஐந்தம் குழி இரண்டொடு ஏழில் இரண்டும், (நிலப்.05 குழி 02 2/7) வீடும், செய்பயிர் வான் பயிர்களும் கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், வழிவாய்க்காற் பயன்பாட்டுரித்தும், எல்லை கிழக்கு வடக்கு தற்போது மேற்கு தெற்கு இவ் எல்லைப்படி அடங்கலும் இதற்குரியவைகளும்

## இதற்கு எல்லைகள்

கிழக்கு - ஈசன் பெண் செல்வரஞ்சினிக்கும், சிவகுரு பெண் விக்கினேஸ்வரிக்கு முரிய ஆதனங்கள்
வடக்கு - பாதை
மேற்கு - காசிநாதர் பெண் செல்வநாயகிக்கும், பூபாலசிங்கம் பெண் சிவமணிக்குரிய ஆதனங்கள்
தெற்கு - ஒழுங்கை
இவ்வெல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை நாகேந்திரம் சிவகுமார் பெண் செல்வராஜினி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நாகேந்திரம் சிவகுமார் பெண் நடவடிக்கை எடுக்கப்படும் பெயருக்கு ஆதன செல்வராஜினி உரிமைமாற்றம் மேற்கொள்ள என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சிவகுமாரன் சிவானந்தன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 04 . 1969



மறைவு 15 . 06 . 2025

**வடிவேலு செல்வேந்திரகுமார்**

யாழ் ஏழாலை வடக்கு ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும், விழிசிட்டி ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு செல்வேந்திரகுமார் அவர்கள் நேற்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு-தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாந்தினி, சாந்தகுமரன், சூரியகுமரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்சினி அவர்களின் பாசமிகு கணவரும், அபிதாவின் அன்புத் தந்தையும், உசாந்தினி அவர்களின் பாசமிகு உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.06.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பதை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 943 2447

# மரண அறிவித்தல்

மலர்வு 09 . 06 . 1940



உதிர்வு 13 . 06 . 2025

**வேலாயுதபிள்ளை செல்வதேவி**

பெரியநாவலடி கொடிகாமத்தினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவகாமசுந்தரி ஆலய தர்மகர்த்தாவும் ஆலய பரிபாலனசபை தலைவருமான வேலாயுதபிள்ளை செல்வதேவி அவர்கள் கடந்த (13.06.2025) வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா - சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், சோதிஸ்வரன் (லண்டன்), ஜெகதிஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்), சுகந்தினி (ஜேர்மனி), செல்வேஸ்வரன் (லண்டன்), றமேஸ்வரன், சுபாசினி, சுரேஸ்வரன்(கொடிகாமம்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற கௌரிவாணி, வனஜா, வினோதினி, விக்கினராஜா, சுதனி, கிருத்திகா, பாலேஸ்வரன்(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்-கோப்பாய் பிரதேச செயலகம்), வசந்தகலா(அபிவிருத்தி உந்தியோகத்தர் கோட்டக்கல்வி அலுவலகம்-கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், செல்வரத்தினம் (குருக்கள்-பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலாதேவி, காலஞ்சென்ற பத்மாதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராசேந்திரம், காலஞ்சென்ற மல்லிகாதேவி (லண்டன்), இராசதுரை, சத்தியமூர்த்தி, மகேந்திரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற தவமணிதேவி, சந்திராதேவி, சரேஜினிதேவி, காலஞ்சென்ற அருட்சோதி ஆகியோரின் சகோதரியும், சுபத்தினி, சுலோஜினி, சுவாந்தினி, ரங்கிலன், அஸ்வின் ஆரங்கன், அபினாஸ், அனஸ்கன், துளசிகா, மிதுனன், யஸ்மிகா, ரிஷிகா, நிலக்சனா, வைஷ்ணவி(ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), அக்ஷயா, அக்ஷனா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.06.2025) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 01:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியநாவலடி,
கொடிகாமம்.

(CN/45177) D*

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வந்தடைந்தார் கீதா கோபிநாத்

கொழும்பு, ஜூன் 16
சர்வதேச நாணயநிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கையை வந்தடைந்துள்ளார்.


2005ஆம் ஆண்டின் பின்னர் சர்வதேச நாணயநிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை விஜயத்தின்போது கீதா கோபிநாத், நிதியமைச்சு மத்தியவங்கி, சர்வதேச நாணயநிதியம் ஆகியவை இணைந்து நடத்தும் மீட்சிக்கான இலங்கையின் பாதை படுகடன் மற்றும் ஆளுகை என்ற மாநாட்டில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் இலங்கை அதிகாரிகளுடனும், இலங்கை சர்வதேச நாணயநிதியம் ஆகியவற்றுக்கு இடையிலான ஈடுபாட்டுடன் தொடர்புபட்டவர்களுடனும் கீதா கோபிநாத் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார். (ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 07 . 1952



இறப்பு 15 . 06 . 2025

### பெஞ்சமீன் ரஞ்சன்

(ஓய்வுபெற்ற யாழ் போதனா வைத்தியசாலை பிரதம கணக்காளரும் ஓய்வுபெற்ற மல்லாகம் நீதிமன்ற பிரதம கணக்காளரும் சிங்கள ஆசிரியரும்)

மல்லாகத்தை பிறப்பிடமாகவும், 45/12 ஈச்சமோட்டை வீதி . சுண்டுக்குழி யாழ்ப்பணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெஞ்சமீன் ரஞ்சன் அவர்கள் நேற்று (15.06.2025) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெஞ்சமீன் - விக்டோரியா தம்பதியரின் புதல்வனும், மிசாலினா (கமலினி- செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் LIA) அவர்களின் அன்புக் கணவரும், தேவராசா, தனராசா புஸ்பராணி (Baby), வசந்தமணி, ஸ்ரெலா ஆகியோரின் அன்பு சகோதரரும், றக்ஷாயினி, நிஷாலினி (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பளை), அஸ்வினி ( STS -வைத்தியசாலை தொழினுட்பவியலாளர்) ஆகியோரின் அன்பு தந்தையும், நெஷிந்தன் (Document editor & Tamil sigh), அனாஸ் அபிஷன்(பொறியியலாளர்) அவர்களின் மாமனாரும், அபிஷன், இனியா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2025) திங்கட்கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 04.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனை தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 923 5508
076 660 5529

தகவல்:
குடும்பத்தினர்

(CS/30181) D*



# பண்டிதர் பரந்தாமனின் இறுதிக்கிரியைகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 16
தாயகத்தின் பேராளுமை கொண்ட பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உடல்நலக்குறைவால் காலமான நிலையில் அவரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அவரின் புகழுடல் புலோலி தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் உள்ள மாமறவர் மணிமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி உரைகள் இடம்பெற்று ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 10 . 1967



மறைவு 15 . 06 . 2025

### திருமதி அன்பரசி இரமணீதரன்

(ஓய்வு நிலை ஆசிரியை-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மீசாலை மேற்கினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்பரசி இரமணீதரன் அவர்கள் நேற்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-கனகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், இரமணீதரன் (ஓய்வு பெற்ற பொறுப்பதிகாரி- விவசாயத் திணைக்களம், தரவிதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவை-யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஆதித்தியா (சட்டத்தரணி-கொழும்பு), கனிஸ்கர் (பல் மருத்துவமாணவன் -பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆதவனின் (மென் பொருள் பொறியியலாளர்-கொழும்பு) அன்பு மாமியாரும் .இரஞ்சனி, இரங்கன், இரவீந்திரன், இராகினி, இராகுலன், இரஜனி, இராஜவதனி, இரகுநந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1937



மறைவு 14 . 06 . 2025

### திருமதி குயின்ரா இந்திராணி சிவபாதசேகரம்

(ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை கோப்பாய்)

திருமதி குயின்ரா இந்திராணி சிவபாதசேகரம் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) அவர்கள் கடந்த (14.06.2025) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கதிர்காமு சிவபாதசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கௌரி, சுதா கோகுலன், யசோதா, கோபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுரேந்திரன், தேவானந், கீர்த்திக்குமரன், சறோஜினி, லெனிசியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிதா, மோனிஷன், கவிஷ்ணன், கம்சிகன், ஆரபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பலாலி வீதி,

தகவல்:
குடும்பத்தினர்.

# கிராமமட்ட குழுக்களை புதிதாக நியமியுங்கள்

தற்போதுள்ள கிராமமட்ட பொதுப் பாதுகாப்புக்குழுக்களை இரத்துச்செய்து புதிய கிராமமட்ட பொதுப் பாதுகாப்புக்குழுக்களை நியமிக்குமாறு கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவில் அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபத் துக்கமைய கிராமமட்ட பொதுப் பாதுகாப்புக் குழுக்கள் பழைய வற்றை இரத்துச்செய்து தயவு செய்து புதிய குழுக்களைப் பொலிஸார் உருவாக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இதன்போது பிரதேச செயலாளர், கடந்த காலங்களில் குழுக்களில் சட்டவிரோதமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் பலர் உள்ளீர்க்கப்பட்டதனை அவதானிக்கமுடிந்தது. அவர்களை விடுத்து சமூகத்தோடு ஆர்வமுடைய தன்னார்வலர்களை அடையாளம் கண்டு நடுநிலையானவர்களை உள்ளீர்க்குமாறு குறிப்பிட்டார். (ச-125)

## மிகைப்படுத்தப்படும்...

துள்ளது. சீன மக்கள் வங்கியுடன் உள்ள 10 பில்லியன் பெறுமதியான நாணயப் பரிமாற்றத்தை ஒதுக்கீடாகக் கருதியமையால் இந்த மிகைப்படுத்தல் உருவாகியுள்ளது என்று "வெரிட்டே ரிசேர்ச்" ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நாணயப் பரிமாற்றம் சர்வதேச அளவில் வெளிநாட்டு ஒதுக்கீடாகக் கருதப்படுவதற்கான தர நிலையைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் அந்த நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, வெளிநாட்டு சொத்து இருப்பானது திரவத்தன்மையைக் கொண்டிருக்கவேண்டும் அல்லது நிபந்தனையற்ற முறையில் உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஆனால் இந்த நாணயப்பரிமாற்றம் அதைக் கொண்டிருக்கவில்லை. இந்த நாணயப் பரிமாற்றம் பல்வேறு நிபந்தனைகளைக் கொண்டிருக்கின்றது. வெளிநாட்டு ஒதுக்கீடாக அங்கீகரிக்கப்படாத சொத்துகளைச் சேர்ப்பதால் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடு மிகைப்படுத் தப்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது என்று அந்த நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 88 பேரின்...

சொத்துகள் முடக்கப்பட்டவர்களில் 26 பேர் திட்டமிட்ட குற்றம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதிமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருப்பதால் ஏனையவர்களின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

நிலம், வீடுகள், வங்கிக் கணக்குகள், வாகனங்கள், நகைகள், வணிக வளாகங்கள் மற்றும் நெல் வயல்கள் என்பன முடக்கப்பட்ட சொத்துகளுக்குள் அடங்குகின்றன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (அ-எ-இ)

## வவு. மாநகர...

வேட்பாளர் பிரதி முதல்வராகவும் வருவதற்கான சாதக நிலைமைகள் அங்கு காணப்படுகின்றன.

21 உறுப்பினர்களைக் கொண்டுள்ள வவுனியா மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு 11 ஆசனங்கள் தேவை என்கின்ற நிலையில், சபையில் ஆட்சியமைப்பது தொர்பாக தமிழ்க் கட்சிகளிடையே புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று நேற்று எட்டப்பட்டிருக்கின்றது.

ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி பெற்றுக்கொண்ட நான்கு ஆசனங்களும், தமிழரசுக்கட்சி பெற்றுக்கொண்ட மூன்று ஆசனங்களும், ஐக்கியமக்கள் சக்தியின் இரண்டு ஆசனங்களும், ஜனநாயகத்தேசியக் கூட்டணியின் ஒரு ஆசனமும், அகில இலங்கை தமிழ்காங்கிரஸின் ஒரு ஆசனமும் சேர்த்து 11ஆசனங்கள் உள்ளதால், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் முதல்வராகவும், ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளர் பிரதி முதல்வராகவும் வருவதற்கான சாதக நிலைமை அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் தெரிவுசெய்யப்பட்டிருந்த முன்னாள் நகரசபை உறுப்பினரும், ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபன் முதல்வராகப் பெயரிடப்படவுள்ளார். ஜனநாயக தேசியக் கூட்டணி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி முதல்வராகப் பெயரிடப்படவுள்ளார். (அ-எ-110)

## வவு. உள்ளூராட்சி...

இடையே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.

பொது நோக்கம் ஒன்றை அடிப்படையாகக்கொண்டு வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் இணைந்து நிர்வாகத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு அதில் எட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாநகரசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மாநகர முதல்வர் பதவியும், பிரதி முதல்வர் பதவி ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கு முதல் இரண்டு வருடங்களுக்கும், அடுத்த இரு வருடங்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையில் தவிசாளர் பதவி தமிழரசுக் கட்சிக்கும், உபதவிசாளர் பதவி ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. உபதவிசாளர் பதவியை இரண்டு வருடங்களுக்கு பகிர்வது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசியகூட்டணிக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் தொடர்ச்சியாக பேச்சுகளை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேசசபையில் தமிழரசுக் கட்சிக்கு தவிசாளர் பதவியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு உபதவிசாளர் பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேசசபையில் ஐக்கியமக்கள் சக்திக்கு தவிசாளர் பதவியும் தமிழரசுக் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், றிசாட் பதியுதீன், முத்து முகமது, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் க.துளசி உட்பட பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர். (அ-எ-110)

## கொழும்பு...

நடத்திவரும் நிலையில், இன்று முடிவு தெரியவரவுள்ளது.

கொழும்பு மேயர் மற்றும் பிரதி மேயரை தெரிவுசெய்வதற்காக விசேட அமர்வு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இலங்கையிலுள்ள 341 உள்ளூராட்சிசபைகளில் கொழும்பு மாநகரசபை பிரதான சபையாகக் கருதப்படுகின்றது.

நடைபெற்ற தேர்தலில் அந்தச் சபையில் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை எந்தவொரு கட்சியும் பெறவில்லை.

ஆட்சியமைப்பதற்கு 59 ஆசனங்களை பெறவேண்டிய நிலையில் தேசிய மக்கள் சக்தி வசம் 48 ஆசனங்களே உள்ளன.

சில கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அதையடுத்து கொழும்பு மாநகரசபையில் தமது கட்சி ஆட்சியமைப்பது உறுதியென தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபையில் 29 இடங்களைப் பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கியதேசியக்கட்சி (13), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (05), முஸ்லிம் காங்கிரஸ் (04), சர்வஜன அதிகாரம் (02) உள்ளிட்ட தரப்புகளின் ஆசியுடன் ஆட்சியமைக்க முயற்சிக்கின்றது. தமது அணிக்குப் பெரும்பான்மைப் பலம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது.

கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சியின் இரும்புக் கோட்டையாகவே இதுவரை இருந்தது. மஹிந்த அலை வீசிய காலப்பகுதியில்கூட கொழும்பு மாநகரசபையை மஹிந்த தரப்பால் கைப்பற்றமுடியவில்லை. ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. (அ-எ-44-75)

## வவுனியா...

இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் நகரசபை உறுப்பினர் சிவசங்கர், நாம் சில தரப்புகளுடன் பேசியிருக்கின்றோம். இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியால் சிறந்த ஓர் அதிகாரத்தை வழங்கமுடியும் என்று நினைப்போர் எமக்கு ஆதரவை வழங்குவர். மாநகரசபையின் ஆட்சியை நாம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார். (அ-எ-110)

## இராஜேஸ்வரி...

களை மேற்கொள்ளமுடியும் என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொண்ட தலையீட்டை அடுத்தே பொது மக்கள் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதியை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர் என்று அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், இராணுவ உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் ஆலயத்துக்கு நேற்றுச் சென்றிருந்தனர். ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் நடைபெற்றன. (அ-எ-26)

## 220 கிலோ...

இராணுவப் புலனாய்வுத்துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடல்மார்க்கமாகப் படகில் கடத்திவந்த கஞ்சாவை கரையில் இறக்கிக்கொண்டிருந்த சந்தேகநபர்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரைக் கண்டதும் தப்பியோடியுள்ளனர்.

220 கிலோ கஞ்சா, படகு, வெளியிணைப்பு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அவை பருத்தித்துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26-100)

## யாழ்ப்பாணக்...

வென்றுள்ளனர். தியகம மஹிந்த ராஜபக்சவிளையாட்டுமைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் ஜெயரூபன் ரூபிகா 2.60 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், குகராஜ் வைஸ்ணவி 2.50 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார்கள். (அ-ம-இ)

## வலி. வடக்கில்...

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு மக்கள் தங்களின் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அந்தப் பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயம் என்று இலங்கை இராணுவம் அறிவித்துக் கையகப்படுத்திக்கொண்டது. அந்தப் பகுதியில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்கள் பல இடங்களில் குடியேறினர் - இடம்பெயர்ந்தனர்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அந்த மக்களின் காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்றும் இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்கவேண்டும் என்றும் பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டுவருகின்றபோதும், அவை இன்னமும் இராணுவத்தால் விடுவிக்கப்படவில்லை. இடையிடையே சில பிரதேசங்களில் மீள்குடியமர்வு அனுமதிக்கப்பட்டபோதும், இன்னமும் பெரும் நிலப்பரப்பு இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு வளம்மிக்க அந்தப் பிரதேசத்தின் பயன்கள் இராணுவத்தால் சுரண்டப்பட்டுவருகின்றது.

வலிகாமம் வடக்கில் இன்னமும் 2 ஆயிரத்து 700 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தை பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்தாலும், அந்தப் பிரதேசத்தின் வளங்களைச் சுரண்டி வருமானம் ஈட்டுவதிலேயே இராணுவம் முனைப்பாக இருக்கின்றது.

தற்போது வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகளில் 50 சதவீதமானவற்றில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளையும், பண்ணைகளையும் முன்னெடுக்கின்றனர். 10 சதவீதமான காணிகளில் மைதானங்கள், வர்த்தக நிலையங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பன இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து பெறப்படும் விவசாய அறுவடையையும், அவற்றின் ஊடான வருமானத்தையும் இராணுவமே பெற்றுக்கொண்டுவருகின்றது.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தையிட்டிப் பகுதியில் விடுவிக்கத் தயாராகவிருந்த பெண்கள் விடுதி ஒன்றில் தற்போது இராணுவத்தினால் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில், இராணுவத்தினர்பிரதேசசெயலகங்களிடமோ அல்லது உரிய அரச நிர்வாகங்களிலோ எந்தவித அனுமதியும் பெறாது கட்டுமானங்களையும், வர்த்தக நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றனர். அதேபோன்று காங்கேசன்துறையில் தல்செவன விடுதியைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதி, அங்குள்ள சில வீதிகள் இன்னமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மறைமுகமாக இராணுவத்தின் ஆளுகை தற்போதும் தொடர்கின்றது.

வலிகாமம் வடக்கைச் சொந்த இடமாகக் கொண்ட 6 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தற்போதும் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். அவர்களின் விவசாய நிலங்கள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து பொருளாதார நெருக்கடிகளுடன் தங்களின் வாழ்க்கையைக் கொண்டு நகர்த்துகின்றனர். பாடசாலைகள், பாடசாலை மைதானங்கள், ஆலயங்கள், மயானங்கள் எனப் பலவும் இன்னமும் இராணுவத்தின் வசமே இருக்கின்றன. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் பிரதேசங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை முன்வைத்துவருகின்றனர். (அ-எ-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழிகளுக்கு நீதி கிடைக்க அழுத்தம் கொடுக்கவேண்டும்

## கிளிநொச்சி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் ஐ.நா. பிரதிநிதியிடம் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜூன் 16**

**செம்மணிப்புதைகுழி மற்றும் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட புதைகுழிகளை இலங்கைக்கு வருகைதரும் ஐ.நா. பிரதிநிதி பார்வையிட்டு நீதிப்பொறிமுறைக்கு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.**

இவ்வாறு நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கிளிநொச்சி வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் சங்கத் தலைவி யோகராசா கலாறஞ்சினி தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எங்களது பிள்ளைகளுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. இந்த அரசும் அதற்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு மக்களின் வாக்குகளை பெற்று தவிசாளராக நியமிக்கப்பட்டவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று அம்பாறையில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

நடைபெறவுள்ள ஐ.நா. கூட்டத்தொடரிலே எங்களுக்கான நீதிப் பொறிமுறை விடயங்களை வலியுறுத்துவதுடன் இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐ.நா. பிரதிநிதி காணமல் ஆக்கப்பட்ட உறவினர்களை சந்திப்பதோடு செம்மணிப்புதைகுழி மற்றும் கொக்குத்தொடுவாய் புதைகுழிகளையும் பார்வையிடவேண்டும்.

அது தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்-என்றார். (ச- 113)

# நகுலேஸ்வரா பாடசாலைக்கு விளையாட்டு மைதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நீண்டகாலமாக விளையாட்டு மைதானம் இன்றிக் காணப்பட்ட தெல்லிப்பழை நகுலேஸ்வரா பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கு மைதான தேவை கருதி 5 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

# புலம்பெயரிகளுடான சந்திப்பு தவறில்லை!

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி தமது வெளிநாட்டுப் பயணங்களின்போது புலம்பெயர்ந்தவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதில் எவ்வித தவறும் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு ஜனாதிபதி என்பவர் நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் ஜனாதிபதியாவார்.

எனவே, நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியவெளிநாட்டுப் பயணங்களை அவர் மேற்கொள்ள வேண்டும். அந்தவகையில் ஜனாதிபதியின் ஜேர்மன் பயணத்தை வரவேற்கின்றோம். அது கட்டாயம் மேற்கொள்ளவேண்டிய பயணமாகும்.

இவ்வாறு ஜனாதிபதி வெளிநாடு செல்லும்போது அங்கு வாழும் இலங்கை புலம்பெயரிகளை அவர்கள் தமிழராக இருந்தாலும், சிங்களவாராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் சந்தித்துக் கலந்துரையாடுவதில் எவ்விதப் பிரச்சினையும் கிடையாது. அவர்களின் கோரிக்கைகள் செவிமடுக்கப்படவேண்டும். பிரச்சினைகளைக் கேட்டறியவேண்டும். ஆனால் அவர்களுடன் இணக்கம் எட்டப்படும் விடயங்கள் நாட்டுக்கு நன்மையானவையா என்பதை ஆராயவேண்டும் - என்றார். (ச-44)

**வீடும் காணியும் விற்பனைக்கு**

கொக்குவிலில் 1 1/2 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

077 007 3062

(CS/58588) J-1

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**வேலையாட்கள் தேவை**

வடமாகாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள மேசன், கூலியாட்கள் தேவை

தொடர்பு: 076 783 3020

(CS 58591) E-1

# 180 மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

மத்திய மருந்தகங்களில் வலி நிவாரணிகள், மற்றும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக நோய்க்கான மருந்துகள் உட்பட 180 அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு முக்கியமான புற்றுநோய் மருந்து பல மாதங்களாகப் பற்றாக்குறையாக உள்ளது. இது நோயாளிகளின் சிகிச்சையை மட்டுப்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**அஹமதாபாத் விமான விபத்து**

# விபத்துக்குள்ளான விமானத்தை நாங்கள் பராமரித்ததேயில்லை!

## கைவிரித்தது துருக்கிய நிறுவனம்

புதுடில்லி, ஜூன் 16

இந்தியாவின் அஹமதாபாத் நகரில் விபத்துக்கு உள்ளான 'போயிங்' விமானத்தை தாங்கள் பராமரிக்கவில்லை என்று துருக்கிய நிறுவனம் அறிவித்துள்ளது.

அஹமதாபாத் நகரில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 'எயார் இந்தியா' நிறுவனத்துக்குச் சொந்தமான, 'போயிங்' ரக விமானம் விபத்துக்கு உள்ளாகியது. இந்த விமானத்தை, துருக்கியைச் சேர்ந்த நிறுவனமொன்றே பராமரித்தது என்றும், பராமரிப்புப் பணிகளில் சதி இடம்பெற்றிருக்கலாம் என்றும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, இந்தியாவுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்ட குறித்த துருக்கி நிறுவனம், விபத்துக்குள்ளான விமானத்தைத் தாங்கள் பராமரிக்கவில்லை என்று கூறியுள்ளது. 'விபத்துக்கு உள்ளான விமானத்தைப் பராமரித்த நிறுவனம் எது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அது தொடர்பான அறிக்கையிடல் எமக்கு அவசியமற்றது' என்றும் துருக்கிய நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த விமான விபத்தின்போது படுகாயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த நால்வர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, ஒட்டுமொத்த இறப்பு எண்ணிக்கை 270ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**வாழ்த்து தெரிவிக்கின்றேன்**



நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

22 ஆம் வட்டார J/67 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த

ஆகிய நான் யாழ் மாநகரசபையின் உறுப்பினராக

வெற்றி பெறுவதற்கு உதவியாக இருந்த எனது மாமா

அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.